

HEKS
EPER

# BrückenbauerInnen

**பெற்றோரை வலுப்படுத்துதல், பிள்ளைகளை ஊக்குவித்தல்**

பாசல் பாடசாலைகள் எப்படிச் செயற்படுகின்றன?

எனது பிள்ளை எங்கு டொச்மொழியைக் கற்றுக் கொள்ளலாம்?

பாடசாலை எனக்கொரு கடிதமனுப்பியுள்ளது. அதன் விளக்கம் என்ன?

நான் வேலைக்குச் செல்லவேண்டும். எனது பிள்ளையைப் பராமரிப்பது யார்?

எனது குடும்பம் பற்றி எனக்குப் பலதரப்பட்ட யோசனைகள்! நான் எங்கே உதவியைப்பெற்றுக் கொள்ளலாம்?

எனது பிள்ளையின் விருத்தி திருப்தியானதாகவில்லை. இது சம்பந்தமாக யாரை நாடலாம்?

**இதுபோன்ற உங்கள் வினாக்களுக்குப் பதில் கிடைக்காமல் தனிமையாக உணருகிறீர்களா?**

**எங்கள் ஆலோசனையையும், வழிநடத்தலையும் பெற்றுக்கொள்ளுங்கள்!**

Albanisch | Arabisch | Deutsch | Englisch | Italienisch | Portugie-sisch | Serbisch | **Tamilisch** | Tigrinya | Türkisch





**நாங்கள் யார்?** நாம் பல்கலாச்சார மட்டத்தில் "BrückenbauerInnen(தொடர்பமைப்பாளர்கள்)" எனும் செயற்திட்டத்திற்காகப் பணிபுரியும் பிரத்தியேக பயிற்சி பெற்ற குழுவாகும். நாங்களும் குடிபெயர்ந்து வந்தவர்களாதலால், பிள்ளைகள் உள்ளவர்களுக்கு இருக்கும் வினாக்களை எம்மாற் புரிந்து கொள்ளமுடியும். நாம் உங்கள் நன்மை கருதிப் பிள்ளைகள் பற்றிய வினாக்களுக்கு ஆலோசனை வழங்கி உங்களை வழிநடத்துவோம். உங்கள் பிள்ளையின் விருத்திக்கு உதவுவதோடு பாடசாலை மற்றும் ஆசிரியர்களுடனான ஒத்துழைப்பைப் பேணவும் உதவுவோம்.

**எமது தொழிற்பாடு என்ன?** நாம் ஆர்வமுள்ள குடும்பங்களை ஒழுங்கான முறையிற் சென்று பார்வையிட்டுத் தகவல்களை வழங்கி சுவிற்சலாந்து நாட்டுப் பாடசாலை மற்றும் சுகாதார சமுதாய அமைப்புகளைப்பற்றிய விளக்கங்கள் கொடுத்துப் பொருத்தமான ஆலோசனை அல்லது அதுசம்பந்தமான நிலையங்களுக்கு அனுப்புவதோடு உங்களைப் பாடசாலைக்குக்கு அல்லது வேறு இடங்களுக்குக் கதைக்க அழைத்துச் செல்வதுமாகும். உங்கள் தேவையை அறிந்து நாம் தொழிற்படுவோம்.

**ஆர்வமாகவுள்ளீர்களா?** உங்களுக்கு இப்படியான வழிநடத்தல் தேவைப்படின் தயவுசெய்து எம்முடன் தொலைபேசி அல்லது மின்னஞ்சல் மூலம் தொடர்புகொள்ளவும். பின்னர் நாம் உங்களுடன் தொடர்புகொள்வோம். இச்சலுகை 11 மொழிகளில் வழங்கப்படுவதுடன் இலவசமானதுமாகும். மேலதிக விபரங்களை எமது இணையத்திற் பெற்றுக் கொள்ளலாம் www.heks.ch/brueckenbauerinnen

**தொடர்பு** (தமிழ்): 079 266 90 21
(டொச்) Irene Zwetsch தொலைபேசி 061 367 94 48
(செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் முழுநாளும்)
மின்னஞ்சல்: irene.zwetsch@heks.ch

பின்தரப்படுவரின் வேண்டுகோளுக்கமைய "BrückenbauerInnen" HEKS செயற்படுகிறது:

Christoph Merian Stiftung
Kanton Basel-Stadt
KIP Kantonales Integrationsprogramm Kanton Basel-Stadt

HEKS EPER

HILFSWERK DER EVANGELISCHEN KIRCHEN SCHWEIZ

**BrückenbauerInnen**
Pfeffingerstrasse 41
Postfach
4002 Basel

Tel. 061 367 94 48
irene.zwetsch@heks.ch
www.heks.ch